[7th November 1966

திரு. சோ. ஆறுமுகம் : வறட்சி அல்லது பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு சர்க்காருடைய உதவி எந்த அளவிற்குச் செய்யப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அறிக்கையைப் பார்த்தால் தெரியும். அதில் எல்லாம் இருக்கிறது.

Kist remission

* 403 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether kist remission is given to farmers and land holders in 1966 in Thanjavur, Tiruchirappalli and Tirunelveli districts owing to failure of monsoon and drought; and

(*b*) if so, the details thereof, talukwar?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி : இந்த அறிக்கை வெளியிட்ட பிறகு இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அறிக்கை தயாரித்து முடிவடைந்த பிறகுதான் என்னென்ன நிவாரணம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இனி மேல் ஒன்றும் இல்லை. அடுத்த பசலியில் ஏதாவது இருக்கலாம். ஆனால், அப்படி இருக்காது என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

திரு. ஆ. கு. சுப்பையா : அரசாங்கத்தினுடைய உத்தரவு வந்த பிறகும் கூட விவசாயிகளிடமிருந்து வசூலித்திருக்கிறார்கள். அப்படி வசூல் செய்த தொகையை 76-வது பசலியில் ஈடு செய் வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவ்வாறு என்னிடத்தில் தகவல் இல்லை. தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பினால் தெரிவிக் கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கிஸ்தி வஜா செய்வதில் இரண்டு போக நிலத்தைப் பார்த்தால் குறிப்பிட்ட வசூலுக்காக உள்ள இரண்டு போகமும் விளையாமல் இருந்தால் வஜா வழங்கலாம் என்றிருக்கிறது. முந்தைய பசலியின் கடைசி போகமும் வருகிற பசலியின் முதல் போகமும் சேர்ந்து இரண்டு போகமும் விளையா மல் இருந்தாலும்கூட வரி வஜா செய்யப்படுகிறதா ? அப்படிச் சேர்ந்து வந்து அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் வஜா செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

---

[a] Printed as Appendix III on pages 545–546.

7th November 1966]

கனம் திரு. வெ. ராமையா : 'ஏற்பட்டால்' என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். இட் ஈஸ் ஹைபாதடிகல். ஏற்பட்ட பிறகுதான் சொல்லமுடியும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அத்தகைய நிலைமை திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. அதை யோசித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கக்கூடிய உத்திரவின் அடிப்படையில்தான் நடக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் உத்தரவில் கண்டபடி போடாமல் இருக்கலாம். அதைப்பற்றித் தனியாக எழுதியனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போது விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதைத் தள்ளிப்போடச் செய்யப்பட்டது என்ற செய்தியைப் படிப்பதற்கு முன்னாலேயே வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பது நிதர்சனமாகத் தெரிகிற உண்மை. அப்படி வசூலிக்கப்பட்ட பணத்தை அடுத்த பசலிக்கு அட்ஜஸ்ட் செய்வதற்கோ அல்லது வாபஸ் செய்வதற்கோ அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இது சம்பந்தமாகத் திட்டவட்டமாக நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஞாபகத்தில் இருப்பதைக் கூறுகிறேன். உத்திரவிட்டதற்குப் பிறகு விவசாயிகளுக்குக் கூடியிருக்கும் பட்சத்தில் அடுத்த பசலிக்கு அட்ஜஸ்ட் செய்யலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. கோ. சி. மணி : அப்படித் தள்ளிப்போட்ட நிலங்களில் சுத்தமாகப் பாசன வசதி இல்லாமல் தரிசு பட்ட நிலங்கள் உண்டா ? தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு நிலங்களுக்குத் தீர்வை கொடுக்கப்பட்டது ? தொகை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : வரி வஜா செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டிலே பஞ்சமாகப் போயிருந்தால் வஜா செய்யப்படுகிறது. ஆனால் பழைய பாக்கியை வசூல் செய்வதற்காக மாடுகளையெல்லாம் கூட ஜப்தி செய்து வசூல் செய்திருக்கிறார்கள். அதை வஜா செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : எனக்குத் தெரிந்தவரையில் மாடுகள் ஜப்தி செய்யப்படவில்லை. இது சம்பந்தமாக சங்கடங்கள் ஏற்பட்டால் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.